# VG BUSINESS MAGAZINE

FOR INTERNAL CIRCULATION ONLY

APRIL - 2022



வேட்டுவக்கவுண்டர் என்பது நமது பெருமை

**மாதம்**
April

**இதழ்**
10

**ஆசிரியர்**
கவிதா வாழைபரமேஸ்வரன்

**இணை ஆசிரியர்**
Dr.வாழைபரமேஸ்வரன்

**வடிவமைப்பு**
கவிதா வாழைபரமேஸ்வரன்

**MOBILE**
90037 95243

**EMAIL**
vgbusinesstycoons@gmail.com

**WEBSITE**
vgtycoons.com

For Internal Circulations Only

பேட்டிகள் மற்றும் சிறப்பு கட்டுரையாளர்களின் கருத்துக்கள் அவர்களின் சொந்த கருத்துக்களே ...

# முகப்புரை

ஒவ்வொரு வருடமும் வணிகர்கள் ஏப்ரல் 1 ம் தேதி தங்கள் வணிகத்திற்கான புது கணக்கை தொடங்குவர். மார்ச் 31 ம் தேதி அந்த வருடத்திற்கான கணக்குகளை சரிபார்த்து முடித்துக் கொள்வது நடைமுறை வழக்கம். வணிகத்தில் கணக்குகளை சரியான முறையில் கையாள்வதும் முக்கிய அம்சமாகும். சரியான முறையில் கணக்குகளை பாராமரித்தால் தான் வணிகத்தில் வெற்றி அடைய முடியும். அந்த வகையில் 2021 – 2022 நிதி ஆண்டிற்கான கணக்குகளை முடித்துவிட்டு 2022 – 2023 ஆண்டிற்கான புதுக் கணக்கைத் தொடங்க உள்ள அனைத்து வேட்டுவ கவுண்டர் வணிகர்களுக்கு வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன். நமது சமுதாய வணிகர்கள் வரும் புது நிதி ஆண்டில் தங்களது வணிகத்தில் வெற்றி நடை போட்டு ஒவ்வொருவரும் லாபமடைய வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன்.



**கவிதா வாழைபரமேஸ்வரன்**




Hi Kavitha, This month article is also very nice and i want thank you for sharing article about my aunty Parvathi, Cbe. Her Mother in law is one of my grandmother. I personally want to thank you both because a lot of information about her even I don't know. Thank you very much, which makes us to think more and achieve more in life.

**- Mrs.Sudha Gopal,**
**Bangalore.**

அனைவருக்கும் வணக்கம். VG Business Magazine மிகவும் அருமை. இளம் வீராங்கனை கோமதிக்கு வாழ்த்துக்கள். உங்களை மாதிரி குழந்தைகள் நமது சமூகத்தில் மென்மேலும் வளரவேண்டும். மென்பொருள் வித்தகி Mrs.பார்வதி மேம் Non-IT to IT இல் படித்து IT நிறுவனம் நடத்தி வருவது மிகவும் பெருமைக்குரிய விஷயம். Great to see success stories like providing software services in public sectors, Airports is an big achievement. We know how hard it is to get clients in govt sectors.. Many Congratulations to Gomathi and Parvathy Mam, All the very best for your next miles stones.

**- Mr.Shanmugam,**
**Chinna Kumarapalayam.**

# நீங்களும் தொழில் முனைவோர் ஆகலாம்

## (Be An Entrepreneur)

5



வணக்கம்,

ஆர்வமுள்ள ஒவ்வொருவரும் தொழில் முனைவோர் ஆகலாம்… தொழில் முனைவோருக்கான குணநலன்களைப் பற்றிய அறிதலும், புரிதலும் அவசியம். அந்த வகையில் இந்த மாதம் நீங்கள் உங்கள் குணநலன்களை ஆய்வு செய்யுங்கள், மதிப்பிடுங்கள்… பின்பு அந்த மதிப்பீடுகளை சீராய்வு செய்யுங்கள்… உங்களைப் பற்றிய தன் சுய ஆய்வு செய்யுங்கள், உங்களது பலம் என்ன பலவீனம் என்ன என்பதை பற்றி விரிவாக சுய ஆய்வு செய்யுங்கள். இந்த சுய ஆய்வு பற்றி தனியாகவே வரும் மாதங்களில் ஒரு மிகப்பெரிய கட்டுரையை எழுத உள்ளோம் அதில் இன்னும் விளக்கமாக காணலாம். அதற்கு முன்பாக சுய ஆய்வு பற்றி தொடங்குங்கள்…

இந்த மாதம் சுய ஆய்வில் உங்களது பலம், பலவீனம் இவைகளை குறிப்பெடுத்து வாருங்கள்.

அதில் உங்களுடைய

- அறிவு
- திறமை
- குணநலன்கள்
- வசதி வாய்ப்புகள்

என 4 பிரிவுகளில் பட்டியலிடுங்கள். நிறைய தகவல்களை ஒவ்வொரு தலைப்பின் கீழ் கூட குறிப்பு எழுதி வாருங்கள். இதைப்பற்றி நாம் பின்னர் விளக்கமாகவும் விரிவாகவும் பின்பு காணலாம்...

## எதிர்பாராத விளைவுகளை சமாளிப்பது



பெரும்பாலானவர்களுக்கு நிறைய திட்டங்கள், யோசனைகள், ஞானம் என்ன செய்தால் நல்லது என்று எல்லாம் தெரியும், இருந்தாலும் தைரியமாக முடிவு எடுக்க பல நேரங்களில் தயங்கினால் எதிர்பாராத விளைவுகள் வந்தால் அவைகளைச் சமாளிக்கும் தன்னம்பிக்கை இல்லை என்பதே காரணமாகும். தொழில் முனைய வேண்டும் என்று ஒருவர் முடிவு எடுக்கும்போது அவர் நன்றாக நினைவில் கொள்ள வேண்டியது எந்த ஒரு தொழிலிலும், வேலையிலும் சிறிதும் எதிர்பாராத விதமாக

ஏதாவது தடங்கல்கள் இருக்கத்தான் செய்யும். நினைத்தபடியே எல்லாம் தடையின்றி நடந்துவிடாது. எனவே இம்மாதிரி சிறுசிறு தடங்கல்கள் எந்த வகையில் வரும், அப்படியே எதிர்பாராமல் வந்தாலும் என்ன மாற்று நடவடிக்கை எடுத்து சமாளிக்க முடியும் என்று முன்னதாகவே யோசித்து, அலசி, தன்னம்பிக்கையுடன் தொடங்க வேண்டும். எந்த அளவு சிக்கல்கள் வரும் அதனை எப்படி சமாளிக்கலாம் என முன்கூட்டியே கணக்கிட தெரிந்திருந்தால் அச்சமில்லாத ஒரு வணிகத்தை வெற்றிகரமாக நடத்த முடியும்.

## பிரச்சினைகளுக்கு தீர்வு காணுதல்



வாழ்க்கை என்றாலே பிரச்சினைகள் தான் என்பதை எல்லோரும் உணரவேண்டும், அதிலும் தொழில் என்று ஆரம்பித்து, ஆட்களை கூட்டாக வைத்து, மக்களை நம் பொருட்களை / சேவைகளை நேசித்து வாங்க வைப்பதற்கு பல்வேறு பிரச்சினைகளை எதிர்கொள்ள வேண்டிவரும், என்ற உண்மையை த் திறமையான நுண்ணறிவு பெற்ற தொழில் முனைவோர் நன்கு அறிந்து எதிர்நோக்கி இருப்பர். அதனால் பிரச்சினைகள் அவ்வப்போது எதிர்ப்படும் பொழுது அதிர்ச்சியும், பீதியும்

அடையாமல் நிதான புத்தியுடன் மனத்தளர்வு எதுவும் ஏற்படாமல் தக்க வழிமுறைகளைக் கையாண்டு அடுத்துவரும் காரியங்களைச் செய்து கொண்டே முன்னேற வேண்டும். ஒவ்வொரு நாளும் என்ன பிரச்சினை வரும் எப்படி சமாளிக்கலாம் அதுதானே தொழில் நடத்துவது என ஆவலுடனும் தன்னம்பிக்கையுடன் எதிர்நோக்கி இருப்பார்கள். பிரச்சினைகளைச் சமாளிப்பதே தொழிலில் வெற்றி, சாதனை. சிலருக்கு சில நாட்கள் பிரச்சினையே இல்லை என்று வரும்போது அந்த சூழ்நிலையை பிரச்சினையாக நினைப்பர். இது நல்ல அறிகுறி, தொழில்முனைவோரின் குணாதிசயங்களில் பிரச்சினைகளை தீர்வு காண்பது மிக மிக முக்கியமான குணநலம் ஆகும்.

## படைக்கும் திறன் புதுமை எண்ணம்



புதிதாகத் தோன்றும் அரிய எண்ணங்களை நடைமுறைப் படுத்த முயலும் எண்ணம். இதுவரை காணாதவை மற்றும் கண்டறியாதவை மட்டும் புதுமை எண்ணங்கள் என்பது அல்ல: ஏற்கனவே அறிந்த விஷயங்களை புதிய இடங்களிலும், புதிய சூழ்நிலையில் புதுமையாகப் பயன்படுத்துவதும் புதிய எண்ணங்களாகக் கருதலாம்.

## திட்டமிடுதலின் முக்கியத்துவம்




திட்டமிடுதலின் முக்கியத்துவத்தை உணர்ந்து ஆங்கிலத்தில் ( Fail to plan is plan to fail ) என்பார்கள். நன்கு திட்டமிடல் முடிந்தால் பாதி செயல் முடிந்ததாகும். ஒரு மரத்தை வெட்ட வேண்டுமானால் முதலில் கோடாரியை கூர்மையாக்க வேண்டும். கோடாரியைக் கூர்மையாக்க எவ்வளவு நேரத்தை எடுத்துக் கொள்கிறோமோ அதைவிட பத்து மடங்கு நேரத்தை வெட்டுவதில் மிச்சப்படுத்த முடியும். திட்டமில்லாதவர்க்கு வாழ்க்கை கரையில்லாத அணையைப் போல வீணாகும். காட்டாற்றில் வரும் வெள்ளத்தை அணை மூலம் தேக்கி பின்னாளில் வாய்க்கால் மூலமாக பாசனத்திற்கு பயன்படுத்தி நெல்லும், கரும்பும், வாழையும் விளைவிப்பதைப் போல நம்முள் இருக்கும் ஆற்றலைத் தேக்கி, ஒருமுகப்படுத்தி முறையான திட்டத்தின் மூலமாக இலக்கை அடைய முயற்சிக்க வேண்டும். லட்சியம் என்ற அழகிய கோபுரத்திற்கு திட்டமிடுதல் அடித்தளமாகும்.

## திட்டமிடுதலின் வகைகள் :

திட்டமிடுதல் இலட்சியத்திற்கு ஏற்ப பல வகைகளாகப் பிரிக்கலாம். பொதுவாக எத்தகைய லட்சியமாக இருந்தாலும் கீழ்காணும் திட்டமிடும் வகை பொதுவாகப் பொருந்தும்.

- காலத்தை திட்டமிடல் ( Time Planning )
- நிதியைத் திட்டமிடுதல் ( Money Planning )
- இலக்கைத் திட்டமிடுதல் ( Target Planning )
- வளத்தைத் திட்டமிடுதல் ( Resource Planning )

இங்கு திட்டமிடுதல் என்பது மனதளவில் உணர்வுபூர்வமாக திட்டமிடுவதையே குறிக்கும். அவசியம் ஏற்படின் அல்லாமல் கட்டாயம் எழுதி வைத்துக் செயல்படலாம் என்றே நான் கூறுவேன்.

- **காலத்தைத் திட்டமிடுதல் :**



உலகத்திலேயே விலை மதிக்க முடியாத செல்வம் காலம் ஒன்றே. இழந்துவிட்ட காலத்தை யாராலும் திரும்பப் பெற முடியாது, எனவே நமக்கு இருக்கும் நேரத்தை எவ்வாறு செலவழிப்பது எத்தகைய காரியங்களுக்கு எவ்வளவு நேரத்தை செலவழிப்பது என்பதைப் பற்றியும் இந்த கால அளவுக்குள் லட்சியத்தின் இந்த பகுதியை அடைந்து விடுவது என திட்டமிட வேண்டும். பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் பாடத்திட்டத்தை

பூர்த்தி செய்வதற்கு கால அட்டவணை தயார் செய்து அதன் அடிப்படையில் ஒவ்வொரு பாடத்திற்கும் காலாண்டு தேர்வுக்கு இவ்வளவு, அரையாண்டுத் தேர்வுக்கு இவ்வளவு என்று பிரித்து, அந்தப் பாடங்களை சொல்லிக் கொடுக்கும் ஆசிரியருக்கு பிரித்துக் கொடுத்திருப்பார்கள். மாறாக ஒரு ஆண்டிற்குள் எல்லா பாடத்தையும் முடித்து கொடுக்க வேண்டும் என்று விட்டுவிடுவதில்லை. அவ்வாறு திட்டம் இல்லாமல் போனால் பாடங்களை முறையாக ஒரே சீரான முறையில் முடிக்க முடியாது. அது போலவே உங்களுடைய வணிகத்தையும் ஒவ்வொரு மாதமும், காலாண்டும், அரையாண்டும், ஒவ்வொரு ஆண்டும் என பிரித்துப் பிரித்து இலக்குகளை நிர்ணயித்து, திட்டமிட்டு ஒவ்வொரு செயலாக செய்ய வேண்டுகிறேன்.

- **முதலீட்டை திரட்ட திட்டமிடுதல் :**



நம்முடைய லட்சியத்தை தொடங்க நமக்கு தேவைப்படும் முதலீட்டு தொகை எவ்வளவு எனவும், மீதி தொகையை தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள், தொழில் முனைவோர் கூட்டுறவு சங்கங்கள், இதர பிற நிதி நிறுவனங்கள் மூலம் பெற என்ன என்ன

செய்ய வேண்டும், அவர்களின் திட்ட விபரங்கள் போன்றவற்றைத் தயார் செய்ய வேண்டும். நிதி திரட்டும் திட்டத்தில் நிதி செலவழிக்கும் வழிமுறைகளும் உள்ளடக்கப்பட வேண்டும். அவசியமற்ற செலவினங்கள் தவிர்க்கப்பட்டு முறையான செலவு திட்டம் தீட்டப்பட்டு அதனடிப்படையில் செலவழிக்க வேண்டும். மற்றவர்களிடம் இருந்து நாம் பெற்ற தொகை எவ்வாறு எந்த கால அவகாசத்திற்குள் திருப்பி செலுத்த வேண்டும் என்று தெளிவாகத் திட்டத்தில் குறிப்பிட வேண்டும்.

- **இலக்கைத் திட்டமிடுதல்:**



நமது இலக்கு என்ன என்பதை சிறு சிறு நிலைகளாகப் பிரித்து அல்லது சிறு சிறு அலகுகளாகப் பிரித்துக் கொள்ள வேண்டும். ஒவ்வொரு இடத்திற்கு தக்கவாறு படிநிலைகளை அமைத்துக்கொண்டு அவற்றை ஒன்றன் பின் ஒன்றாக அடைந்து முன்னேறிக் கொண்டே இருந்தால் முடிவில் நமது லட்சியத்தை அடைந்து வெற்றி வாகை சூடலாம். ஒவ்வொரு நிலைகளிலும் நாம் வெற்றிபெறும் வெற்றியின் ஒட்டுமொத்த தொகுப்பே நமது இலக்கின் வெற்றி ஆகும்.

- **வளத்தைத் திட்டமிடுதல்:**



நமது வாழ்க்கையின் குறிக்கோளை அடைய நமக்குத் தேவையான வளத்தை ( Resource ) எவ்வாறு திரட்டுவது அல்லது வளர்த்துக் கொள்வது என்று எண்ணிப் பார்த்து அதற்குத் தேவையான ஏற்பாடுகளை செய்ய வேண்டும். முன்னேற வேண்டும் என்ற ஆசை எப்போதும் நெஞ்சில் நெருப்பாக எரிந்து கொண்டே இருக்க வேண்டும். இவ்வாறாக வாழ்க்கையின் ஒவ்வொரு நிலையையும் முன்கூட்டியே திட்டமிட்டு நிறை குறைகளை நன்கு ஆராய்ந்து செயல்படுவதன் மூலமும், தோல்வி ஏற்படும் சந்தர்ப்பங்களை குறைக்கும் போதும் வெற்றி வாய்ப்புகள் அதிகமாகிறது.

## தன்னம்பிக்கை



வெற்றிகரமாகத் தொழில் நடத்துபவர்கள் எல்லோரிடமும் அதிகளவு தன்னம்பிக்கை இருப்பதை காணலாம். அதேபோன்று

அதிக தன்னம்பிக்கை உடைய தொழில் முனைவோர்கள் எல்லோரும் நிச்சயம் தொழில் ஆரம்பித்து வெற்றிகரமாக நடத்த முடியும் எனக் கூறலாம். இவர்கள் தங்களைப் பற்றியும் தங்கள் திறமை அணுகுமுறை பற்றியும் வாய்ப்புகளை நன்கு பயன்படுத்திக்கொள்ளும் வகைகளை பற்றியும் நன்கு தெளிவாக அறிந்து இருப்பார்கள். தங்கள் தொழிலில் வாழ்வில் வரும் காலங்களில் என்ன என்ன மாற்றம், முன்னேற்றம், நிதி நிலைமை எல்லாம் ஏற்படும் தன்மையையும் நன்கு துல்லியமாக கணிக்கும் திறன் பெற்றவர்களாக இருப்பார்கள். இவைகளை எல்லாம் நல்ல விதத்தில் உண்டாக்குவது தங்கள் ஆளுமைத்திறன் தான் என்று முழுமையாக நம்புகிறவர்கள்.

## வளைந்து கொடுத்து வழிப்படுத்தும் திறமை



வியாபாரத்தில் பிடிவாதப் போக்கு இருக்குமானால் அதிகமான வியாபார அபிவிருத்தியை அடைய இயலாது. பொதுவாக வியாபாரத்தில் கோபம் இருக்கக் கூடாது. விற்பனை செய்வோர் வாடிக்கையாளரை அணுகும் பொழுது அல்லது உற்பத்தி போன்றபல படி நிலைகளை கையாளும் பொழுது சூழ்நிலைக்கு ஏற்ப வியாபார நெளிவு சுளிவுகளை பயன்படுத்த வேண்டும். பேசிப் பேசியே ஒருவரை தனது வழிக்கு கொண்டு வருவது தொழில்முனைவோரின் திறமையாகும்.

## தலைமையின் பணிகள்

நிறுவனத்தின் தலைவர் நிறுவனம் செம்மையாக செயல்பட தலைமை ஏற்று ஆற்றும் பணிகளாவன:

1. **நோக்கங்களை உருவாக்குதல்**

ஒரு தலைவர் தன்னை பின்பற்றுவதற்கான கொள்கைகளையும், நோக்கங்களையும் உருவாக்குகின்றார் இதுவே வழிகாட்டியாக செயல்படுகிறது.

2. **நிறுவனத்தை அமைத்தல்**

நல்ல தலைவர் நிறுவனத்தை அழகாக வடிவமைக்கின்றார் மற்றும் உத்தரவிடுகிறார்.

3. **ஒருங்கிணைப்பு**

நல்ல தலைவர் தனிப்பட்டவர்களின் எண்ணத்தையும் நிறுவனத்தின் எண்ணத்தையும் இணைக்கின்றார். மேலும் இதன்மூலம் சமுதாய ஆர்வத்தைத் தூண்டுகின்றார்.

4. **சொல்லூக்கமளித்தல்**

நிறுவனத்தின் பணியாளர்களை இயக்கி நிறுவனத்தின் நோக்கங்கள் முழுமை அடைய முயற்சிக்கிறார்.

5. **மேலாண்மையையும் பணியாளர்களையும் இணைத்தல்**

6. **பிற பணிகள்**

நிறுவனத்தின் சார்பாக பணி புரியும் பணியாளர்களுடனும் இதர மக்களுடன் தொடர்பு கொள்கிறார். போட்டி சந்தையில்

நிறுவனம் செம்மையாக செயல்பட தேவையான எல்லா நடவடிக்கையையும் மேற்கொள்கிறார். நிறுவனத்தின் ஒழுங்கு முறையை நிலை நாட்டி பணியாளர்களை ஊக்குவிக் கின்றார். இதனால் தலைவர் நிறுவனத்திற்கு எவ்வளவு அவசியம் என்பது தெளிவாகிறது.

## தலைமைக்குரிய தனி இயல்புகள்

- உடல் வலிமையும் மனவலிமையும் முக்கியமானதாகும்.
- தலைவர் மனித உள்ளத்தை எளிதில் புரிந்து கொள்ளக் கூடியவராக இருக்க வேண்டும்.
- எந்த பிரச்சினையையும் தீர்த்து விடலாம் என்ற மன உறுதியும் கொண்டவராக இருக்க வேண்டும்.
- பிரச்சினைகளில் முடிவெடுக்கும்போது உண்மை நிலையை அறிந்து செயல்பட வேண்டும்.
- தெளிவாக பேசும் திறன் பெற்றிருத்தல் மிகவும் அவசியமாகிறது.
- ஒரு சிறந்த ஆசிரியராகவும் வழிகாட்டியாகவும் இருக்க வேண்டும்.

நன்றி வணக்கம்...

மீண்டும் அடுத்த மாதம் சந்திப்போம் –



கே. வி. இரமேஷ்
மனித வள மேம்பாட்டுப் பயிற்சியாளர்
மற்றும் ஆராய்ச்சியாளர்
வணிக மேம்பாட்டு ஆலோசகர்

# தொழில் முனைவோர்களுக்கு வழிகாட்டும் வின்னர்ஸ் ராமசாமி



கோவையில் Winners Engineering Company என்னும் பெயரில் கட்டுமான தொழிலுக்கு தேவையான இயந்திரங்களை தயாரிக்கும் தொழிற்சாலையை நடத்தி வருகிறார் திரு. இராமசாமி அவர்கள். சோசியல் மீடியாவின் வளர்ச்சியை தெளிவாக அறிந்து வைத்துள்ள இவர் விளம்பரங்களுக்கு சமூக வலை தளங்களையே அதிகம் பயன்படுத்தி வருகிறார்.

புதிதாக தொழில் தொடங்க விரும்பும் நமது சமுதாய இளைஞர்களுக்கு பெரிதும் உதவி வருகிறார். தனது நிறுவனத்தின் பெயரில் இருக்கும் வின்னர்ஸ் என்னும் பெயருக்கு ஏற்ப தனது தொழிலில் வெற்றியாளராக நம்முன் திகழ்ந்து வருகிறார். திரு.இராமசாமி அவர்கள் நமக்களித்த பிரத்தியேக பேட்டியிலிருந்து....

- **பூர்வீகம் ....**

ஈரோடு மாவட்டம், சத்யமங்கலம் தாலுக்கா உக்கிரம் பஞ்சாயத்து அருகில் கக்கராகுட்டை புதூர் எனது சொந்த ஊர். அப்பா பெயர் தேமலைக் கவுண்டர். அம்மா பெயர் சுப்பாயாள். பட்டாலி வேட்டுவக் கவுண்டர் குலம். எனக்கு ஒரு அண்ணன் மற்றும் ஒரு தம்பி என உடன் பிறந்தோர் இருவர். அண்ணன் சொந்த ஊரில் இருக்கிறார். தம்பி கோயம்புத்தூரில் உள்ளார்.

- **படிப்பு....**

சத்யமங்கலத்தில் பள்ளி இறுதி வரை மட்டுமே படிக்க முடிந்தது. கல்லூரி சென்று படிக்க இயலவில்லை. அனுபவத்தில் மட்டுமே தொழில் செய்து வருகிறேன். கற்றுக் கொள்ள வேண்டும் என்கிற ஆர்வம் எனக்கு நிறையவே உள்ளதால் தொழில் நுணுக்கங்களை அனுபவம் மூலம் கற்றுத் தெரிந்து கொள்கிறேன்.

- **வேலை ....**

பள்ளி படிப்பை முடித்த பின்னர் ஏதாவது ஒரு வேலைக்கு செல்ல வேண்டும் என்ற எண்ணத்தில் இருந்த என்னை எனது உறவினர் அதாவது எனது அண்ணனின் மச்சினர் என்னை கோயம்புத்தூர் அழைத்து வந்து லேத்து பட்டறையில் சேர்த்து விட்டார். நம்மினத்தை சேர்ந்த காவிலிபாளையம் கேசவ மூர்த்தி அவர்களின் லேத்து பட்டறையில் சேர்த்து விட்டார். முதன் முதலில் எனக்கு இரும்பு சம்பந்தமான தொழிலை கற்றுக் கொடுத்தவர் திரு. கேசவமூர்த்தி அவர்கள் தான்.



திரு.கேசவமூர்த்தி அவர்களிடம் மூன்றே மாதங்களில் இரும்பு தொழிலைப் பற்றி முழுமையாக தெரிந்து கொண்டேன். சம்பளம் என்று பெரிதாக கிடையாது. அவருடைய அறையிலேயே தங்க வைத்துக் கொண்டார். சாப்பாட்டு செலவிற்காக ஒரு நாளைக்கு பத்து ரூபாய் கொடுப்பார். திரு. கேசவமூர்த்தி அவர்கள் என்னை முழுமையாக நம்பி அவரது லேத்து பட்டறையின் முழு பொறுப்பை என்னிடமே ஒப்படைத்தார். 1985 முதல் 1987 வரை வேலை பார்த்தேன். திரு.கேசவமூர்த்தி அவர்களால் தொடர்ந்து பட்டறையை நடத்த முடியாத காரணத்தினால் வேறு பல சிறு சிறு கம்பனிகளில் வேலை செய்தேன். உதிரி பாகங்கள் தயாரிக்கும் தொழிலை விட இயந்திரங்கள் தயாரிக்கும் தயாரிப்பு நிறுவனத்தில் வேலை செய்தால் தொழிலை பற்றி மேலும் அறிந்து கொள்ளலாம் என்பதால் கட்டுமான தொழிலுக்கு தேவையான இயந்திரங்களைத் தயாரிக்கும் இஞ்சினியர்ஸ் என்டர்பிரைஸ்சஸ் என்னும் கம்பெனியில் சேர்ந்து பணி புரிந்தேன். ஆரம்பத்தில் தினக் கூலி அடிப்படையில் 35 ரூபாய் சம்பளம். தொடர்ந்து 15 ஆண்டுகள் அதே கம்பனியில் பணிபுரிந்தேன்.



## • சொந்த நிறுவனம் ....

15 ஆண்டுகள் வேலை செய்த பிறகு இஞ்சினியர்ஸ் என்டர்பிரைஸ்சஸ் நிறுவன முதலாளியிடம் தனியாக தொழில் தொடங்க வேண்டும் என்கிற என்னுடைய விருப்பத்தை தெரிவித்தேன். அவர்களின் ஆசியுடன் Winners Engineering Company யை 2010 ல் என் நண்பருடன் சேர்ந்து ஆரம்பித்தேன். ஆரம்பத்தில் சிறு ஒர்க் ஷாப் என்கிற அளவில் தான் இருந்தது. பழைய கம்பனி முதலாளியே எங்களுக்கு ஜாப் ஒர்க் ஆர்டர் கொடுத்தார். 2013 முதல் இயந்திரங்கள் தயாரிக்க தொடங்கினோம். சில வருடங்களுக்கு பிறகு பங்குதாரர் விலகி விட்டார். எனவே நானும் எனது மூத்த மகனும் பங்குதாரர்களாகி கம்பனியை தொடர்ந்து நடத்தி வருகிறோம்.



## • குடும்பம் ....

எனது மனைவியின் பெயர் புஷ்பா. புளியம்பட்டி அருகில் உள்ள தொட்டிபாளையத்தில் பிறந்தவர். இலங்க வேட்டுவக் கவுண்டர் குலத்தை சேர்ந்தவர். எங்களுக்கு இரு மகன்கள். மூத்த மகன் பெயர் அரவிந்த் குமார். BE மெக்கானிக்கல் இன்ஜினியரிங் முடித்துள்ளார். 2014 ல் படிப்பை முடித்த பிறகு ஒரு வருட காலம் வெளியில் வேலை செய்தார். அதன் பிறகு எனது நிறுவனத்தில் பங்குதாரராக உள்ளார். மேலும் நமது இனத்தை சேர்ந்த தனது நண்பருடன் இணைந்து ஹார்டுவேர் ஷாப் நடத்தி வருகிறார். இரண்டாவது மகன்

பெயர் நந்த கோபால். B.sc, MBA படித்துள்ளார். தனியார் நிறுவனத்தில் பணி புரிந்து வருகிறார்.

## • தயாரிப்புகள் .....

- Fly Ash Machines
- Hollow Block Machines (auto feeder)
- Inter Locking Brick Machines
- Paver Block Machines
- Table Vibrator
- Pallet Trucks
- Pan Mixer, Tile Mixer
- Clay Brick Machines




## • சுயதொழில் ஆலோசனை...

சுயமாக சிறு தொழில் செய்ய விரும்புவர்கள் fly ash machine, Hollow Block Machines வாங்கி fly ash, Hollow Block கற்கள் தயாரிக்கும் தொழில் செய்யலாம். தண்ணீர் வசதியுடன் அரை ஏக்கர் நிலம் இருந்தால் போதுமானது. மாதம் ஒரு லட்சம் சம்பாதிக்க முடியும். குறைந்த பட்ச முதலீடு இருந்தால் போதுமானது. மானியத்துடன் கூடிய வங்கி கடன் வசதி கிடைக்கிறது. பயன்படுத்திக் கொள்ளலாம். குறைந்த பட்ஜெட்டில் தொழில் தொடங்க விரும்புவோர் Hollow Block Machines வாங்கி பயனடையலாம். ஆனால் போட்டியாளர்கள் அதிகம். Fly Ash கற்கள் தயாரிப்பதற்கு கொஞ்சம் கூடுதல் முதலீடு தேவைப்படும். செங்கல் தட்டுப்பாடு அதிகம் இருப்பதால்

Fly Ash Machines வாங்கி கற்கள் தயாரித்து விற்பனை செய்தால் ஒரு கல்லுக்கு ஒரு ரூபாய் முதல் இரண்டு ரூபாய் வரை லாபம் கிடைக்கும். மாதத்திற்கு இரண்டு லட்சம் கற்கள் வரை உற்பத்தி செய்ய முடியும். இதற்கு 25 லட்சம் வரை முதலீடு தேவைப்படும். சுய தொழில் செய்ய விரும்பும் இளைஞர்கள் என்னை தொடர்பு கொண்டால் அனைத்து விவரங்களையும் தர தயாராக உள்ளேன். மற்றவர்களுக்கு தருவதை விட நம்மினத்தை சேர்ந்தவர்களுக்கு தரமான இயந்திரங்கள் விலை குறைவாக தர தயாராக உள்ளேன்.




Mob: 8585 8686 32
விரைவில் ஆரம்பம்
COMING SOON
K
Kavitha
SUPER MARKET
66 & 67, Industrial Estate, Anand Nagar,
Chinna Elasagiri Road,Hosur - 635126.